# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.08.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7541/F/2023**

திரு.S.சௌந்தரராஜ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட், .. பொது அதிகார அமைப்பு
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான விசாரணை 24.06.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவில் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் 05.08.2026 அன்று நேரில் ஆஜராகி அவரது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நிலையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர், திருமதி.B.ராஜேஸ்வரி, உதவி மேலாளர் (வைப்புநிதி பிரிவு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், கோயமுத்தூர் அவர்கள் 04.08.2026 அன்று ஆணையத்தில் முன்கூட்டியே நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.M.பாலகிருஷ்ணன், துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், கோயமுத்தூர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள இனம் 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு காவல் துறையால் போடப்பட்ட FIR copyன் நகல்களை மனுதாரருக்கு அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் தற்போது மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்தும் மனுதாரரின் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7541/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043

**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.S.சௌந்தரராஜ்,
12/64, மகாலட்சுமி நகர்,
சூலூர் வழி,
கண்ணம்பாளையம்(போஸ்ட்),
கோவை-641402.

**நகல்**
**நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-6410443.

Copy to file: KR/PA